பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

18 05 2026 MONDAY 6 30 PM

வணக்கம்-மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நக்ஸலைட்டு பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்ததில் மத்திய ஆயுதப்படையினரின் பங்கு இன்றியமையாதது என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.
- மின்துறையின் செயல்பாடுகள் குறித்து முதலமைச்சர் திரு. விஜய் இன்று சென்னையில் ஆலோசனை மேற்கொண்டார்.
- சட்டப்பேரவை தேர்தல் தோல்வி குறித்து ஆய்வு செய்வதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக திமுக கூறியுள்ளது.
- தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படுவதை த.வெ.க. அரசு உறுதி செய்ய வேண்டும் என்று அஇஅதிமுக வலியுறுத்தியுள்ளது.
- ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மகளிர் ஹாக்கி போட்டி தொடரில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

நக்ஸலைட்டு பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்ததில், மத்திய ஆயுதப்படையினரின் பங்கு இன்றியமையாதது என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

சத்திஷ்கடின் ஜக்தால்பூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சரணடைந்த நக்ஸலைட்டுகளின் மறுவாழ்விற்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மின்துறையின் செயல்பாடுகள் குறித்து முதலமைச்சர் திரு. விஜய் இன்று சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

சென்னையில் நடைபெற்ற இந்த ஆய்வுக்கூட்டத்தில் மின்தேவை குறித்தும், மின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இதில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

அம்மா உணவகங்களை புதுப்பிக்கவும், தரமான உணவு வகைகளை தங்குதடையின்றி பொதுமக்களுக்கு வழங்க வேண்டும் என்றும் முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளதாக மாநில அரசின் மற்றொரு செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

தமிழகத்தில் உள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 80 கோடி ரூபாய் செலவில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படவுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

பள்ளிக்கல்வித்துறை அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் திரு. ராஜ்மோகன் இதற்கான கோப்பில் கையெழுத்திட்டதாக தமிழக அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள், கழிவறைகள், குடிநீர் வசதி, சுற்றுச்சூழல் போன்ற கட்டமைப்பு வசதிகள் இந்த நிதியை பயன்படுத்தி ஏற்படுத்தப்படும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அரசு மாதிரி பள்ளியில், 56 கோடி ரூபாய் செலவில் வகுப்பறைகள் மற்றும் விடுதிகள் கட்டுவதற்கும் அமைச்சர் ஒப்புதல் அளித்துள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

ஒலிம்பிக் போட்டிகளில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் பதக்கங்களை பெறும் வகையில் தேவையான செயல்திட்டங்களை உருவாக்க நடவடிக்கை

மேற்கொள்ளப்படும் என்று விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா கூறியுள்ளார்.

சென்னை நேரு விளையாட்டு அரங்கில் இன்று ஆய்வு மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்காக பல்வேறு சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>>>><<<<<<

சட்டப்பேரவை தேர்தல் தோல்வி குறித்து ஆய்வு செய்வதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

இன்று தஞ்சாவூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், 234 தொகுதிகளிலும் இந்த குழு ஆய்வு மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்தார்.

தேர்தல் தோல்வி குறித்து யாரும் கவலைப்பட தேவையில்லை என்றும் திமுக மீண்டும் வெற்றிபெறும் என்றும் திரு. மு.க. ஸ்டாலின் கூறினார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படுவதை த.வெ.க அரசு உறுதி செய்ய வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆட்சி மாறினாலும் காட்சிகள் மாறவில்லை என்பது போல், சென்னை அருகே 6 பேர் கொண்ட கும்பலால் இருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் நடைபெற்றுள்ளதாக கூறியுள்ளார்.

காவல்துறை உரிய தலைமையின்றி செயல்படுகிறதா என்ற சந்தேகம் மக்கள் மனதில் எழுந்துள்ளதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி அதில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

உரங்களின் விலையேற்றத்தை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. வீரபாண்டியன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், உரங்களின் விலை 20 சதவீதம் அளவிற்கு அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

விலையேற்றத்தை ஈடு செய்யும் வகையில், விவசாயிகளுக்கு உரிய நிவாரணத் தொகை வழங்கப்பட வேண்டும் என்றும் திரு. வீரபாண்டியன் அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் பெட்ரோல் மற்றும் டீசல் போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாக எண்ணெய் நிறுவனங்களுக்கான மாநில ஒருங்கிணைப்பாளர் திரு. அசோகன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பொதுமக்கள் தேவையின்றி பதற்றமடைய வேண்டாம் என்றும் எரிபொருளை அதிக அளவில் இருப்பில் வைக்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

நாட்டின் பாரம்பரிய செல்வங்களை மீட்டெடுப்பதில் பிரதமர் திரு. நரேந்திர மோடி மேற்கொண்டு வரும் தொடர் நடவடிக்கைகள் பாராட்டுதலுக்குரியது என்று தமிழக ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு சோழப் பேரரசின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆனைமங்கல செப்பேடுகள் மீட்கப்பட்டுள்ளது குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இந்த வரலாற்றுச் சாதனை தமிழகத்திற்கு மட்டுமின்றி, நாட்டிற்கே பெருமை சேர்க்கும் நிகழ்வாகும் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இளைய தலைமுறையினர் நாட்டின் செழுமையான நாகரீக பாரம்பரியத்தை பாதுகாக்க உறுதியேற்க வேண்டும் என்றும் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் வலியுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

சர்வதேச அருங்காட்சியக தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, வேலூர் கோட்டையில் உள்ள அரசு அருங்காட்சியகத்தில் மாணவிகளுக்கான பயிற்சி முகாம் இன்று நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - மோகன் 43 செகண்ட்ஸ்)

இந்த பயிற்சி முகாம் தங்களுக்கு மிகவும் பயனளிக்கும் வகையில் அமைந்ததாக இதில் பங்கேற்ற மாணவிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - மாணவிகள் 20 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் – துரை 53 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

திருவண்ணாமலை மாவட்டம், மண்டகொளத்தூரில் உள்ள டாஸ்மாக் மதுபானக் கடையை மூட வேண்டும் என்ற மாணவர்களின் கோரிக்கை குறித்து பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆட்சியர் திரு. தர்பகராஜ் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

நாமக்கல் மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஆட்சியர் திருமதி. துர்கா மூர்த்தி அறிவுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

தூத்துக்குடி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 21ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மகளிர் ஹாக்கி போட்டி தொடரில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

Salima Tete தலைமையிலான இந்த அணியில், சவிதா, ஜோதி உட்பட 21 பேர் இடம்பெற்றுள்ளனர்.

முதல் போட்டி வரும் 26ஆம் தேதியும், இரண்டாவது போட்டி 27ஆம் தேதியும், மூன்றாவது போட்டி 29ஆம் தேதியும், நான்காவது மற்றும் இறுதிப் போட்டி 30ஆம் தேதியும் பெர்த்தில் நடைபெறுகின்றன.

>>>>>><<<<<<

உலக கோப்பை Sepak Takraw போட்டியில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மலேசியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா 15-7, 15-9 என்ற செட்கணக்கில் சீன தைபேயை வென்றது.

>>>>>><<<<<<

இந்தியா - ஆஸ்திரேலியா இடையே, 18 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் பிரிவு மூன்றாவது ஹாக்கிப் போட்டி தற்போது போபாலில் நடைபெற்று வருகிறது.

>>>>>><<<<<<

ஜெர்மனியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் முதலாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - பிரேஸிலின் Marcelo Demoliner இணை வெற்றிபெற்றது.

>>>>>><<<<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி இன்று ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<<

ஆசிய கோப்பை பிரிட்ஜ் சாம்பியன் போட்டி, கோவாவில் ஜூன் மாதம் 21ஆம் தேதி தொடங்கி, 27ஆம் தேதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்பதற்கான இந்திய அணி நாளை அறிவிக்கப்படவுள்ளதாக கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் கூறியுள்ளது.

>>>>>><<<<<<

ஜெனீவா ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யுகி பாம்ரி - நியூஸிலாந்தின் Michael Venus இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<

அட்லாண்டாவில் நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் Aravindh Chidhambaram பட்டம் வென்றார்.

>>>>>>END<<<<<<